International Journal of Linguistics and Computational Applications (IJLCA) ISSN 2394-6385 (Print)
Volume 8, Issue 3, July – September 2021 ISSN 2394-6393 (Online)

# குறளும் தொகையும்

ஜெ. தேவி

*உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, திருத்தங்கல் நாடார் கல்லூரி, சென்னை - 51*

**சுருக்கம்** — திருக்குறள் சமயச் சார்பற்ற பொதுமையான கருத்துகளை எல்லா காலத்திற்கும் ஏற்கும் வகையிலும் எளிமையாகப் பின்பற்றக்கூடிய நீதிக் கருத்துகளையும் கொண்டு பல்வேறு சிறப்புகளைப் பெற்றுத் திகழ்கின்றது. இவ்வாறு திருக்குறள் பெற்றுள்ள சிறப்புகளுள் குறள்வெண்பா தொகைநிலைத் தொடர், வினைத்தொகை பண்புத்தொகை, உம்மைத் தொகை, உவமைத் தொகை, அன்மொழித் தொகை, வேற்றுமைத் தொகை ஆகிய இலக்கண அமைப்புகளின் ஊடாக நிகழ்ந்த ஆய்வின் வழிக் குறளின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கும் நோக்கில் இவ்வாய்வுக் கட்டுரை அமைந்துள்ளது.

***முக்கிய வார்த்தைகள் -*** *குறள்வெண்பா தொகைநிலைத் தொடர்; வினைத்தொகை பண்புத்தொகை; உம்மைத் தொகை; உவமைத் தொகை; அன்மொழித் தொகை; வேற்றுமைத் தொகை.*

## 1. முன்னுரை

இலக்கிய உலகில் நிலைத்த புகழ்பெற்ற பழந்தமிழ் நூல்களுள் திருக்குறளும் ஒன்றாகும். திருக்குறள் சமயச் சார்பற்ற பொதுமையான கருத்துகளை எல்லா காலத்திற்கும் ஏற்கும் வகையிலும் எளிமையாகப் பின்பற்றக்கூடிய நீதிக் கருத்துகளையும் கொண்டு பல்வேறு சிறப்புகளைப் பெற்றுத் திகழ் கின்றது. இவ்வாறு திருக்குறள் பெற்றுள்ள சிறப்புகளுள் ஒன்று இரண்டடி குறள்வெண்பாவில் ஆறடி மனிதர்கள் கடைபிடிக்கக் கூடிய நல்லறங்களை எடுத்துரைப்பதே ஆகும். ஏழு சீர்களுக்குள் தான் கூற எண்ணும் கருத்துகளை விளக்குவதற்குச் சொற்களைச் சுருக்கியும் விரித்தும் கூற வேண்டும். குறள் வெண்பாவில் திருக்குறள் பாட வள்ளுவர்க்கும் கை கொடுத்தவை தொகை நிலைத் தொடர்கள் ஆகும். குறளில் அவற்றின் பங்களிப்பின் முக்கியத்துவத்தை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

## 2. குறள் வெண்பாவின் தனித்துவம்

தமிழ்ப் பா வகைகளில் முதற்கண் வைத்துச் சொல்லப்படும் பா வெண்பா ஆகும். அது ஈரடிக்குறள், ஓரடி முக்கால் என்ற பெயர்களில் வழங்கப்படும் குறள் வெண்பாவிற்கு இலக்கணத்தில் தனித்த இடமுண்டு. திருவள்ளுவரின் திருக்குறள் தொடங்கி இன்று வரை வெண்பா யாப்பில் பல்வேறு நூல்கள் இயற்றப் பட்டுள்ளன. நீதியை எடுத்துக்கூறவே வெண்பா பயன்படும் என்ற நிலையை மாற்றிப் பல்வேறு பொருண்மைகளில் எழுதி வருகின்றனர். அன்றே காமத்துப் பாலில் இன்பம் குறித்த பல செய்திகளைப் படைத்து வழிகாட்டியவர் திருவள்ளுவரே ஆவார்.

வள்ளுவர் எடுத்துக்கொண்ட பா வகையான குறள் வெண்பா திட்டநுட்பம் செறிந்த சூத்திரம் போன்ற சுருங்கிய யாப்புடையது. இச்சுருக்கத்தால் நூல் ஆழமும் அழுத்தமும் செறிவும் சுரப்பும் நயமும் பல திட்பநுட்பங்களும் பெற்றது (அழகரடிகள், திருக் குறளறம், ப.37) என வெண்பாவின் சிறப்பினை அழகரடிகள் எடுத்துரைத்துள்ளார்.

## 3. வெண்பாவின் இலக்கணம்

ஈற்றடி மூன்று சீர்களும் ஏனைய அடிகள் நான்கு சீர்களும் பெற்று வரவேண்டும். இயற்சீர் வெண்டளையும் வெண்சீர் வெண்டளையும் கலந்து வர வேண்டும். பிற தளைகள் கலந்து வரக்கூடாது.



DOI: **10.30726/ijlca/v8.i3.2021.83005**

ஈற்றுச்சீர் நாள், மலர், காசு, பிறப்பு என்னும் வாய்பாட்டில் ஏதேனும் ஒன்றைக் கொண்டு முடிய வேண்டும் என்பது வெண்பாவின் பொதுவான இலக்கண வரையறை ஆகும். வெண்பாவின் இலக்கணங்களைப் பெற்று ஈரடியில் முதலடி நான்கு சீரையும் இரண்டாம் அடி மூன்று சீரையும் பெற்று வருவது குறள் வெண்பா ஆகும். இக்குறள் வெண்பாவை வீரமாமுனிவர் மூன்று வகைகளாக வகைப்படுத்தியுள்ளார். அவை வருமாறு:

- அடிதோறும் எதுகை அமைப்பு ஒத்து வரும் குறள் வெண்பாக்கள்
- அடிதோறும் எதுகை அமைப்பு இன்றி வரும் குறள் வெண்பாக்கள்
- எதுகை அமைப்புப் பெற்று முதலடி மூன்று சீர்களாலும் இரண்டாமடி நான்கு சீர்களாலும் வரும் குறள் வெண்பாக்கள்

இவற்றில் இறுதியாகக் குறிப்பிட்டுள்ள வகையானது வெண்பாவின் இலக்கண விதிக்கு முற்றிலும் மாறா கூறியதற்குக் காரணம், ஒரூஉ எதுகையினை அடுத்த அடியின் எதுகையாக வைத்துக்கொண்டு முதலடி மூன்று சீர்களாலும் இரண்டாமடி நான்கு சீர்களாலும் அமைவதாகக் கொண்டதே எனக் கு. முதற்பாவலர் அயல்நாட்டு அறிஞரின் யாப்பியல் நோக்கினைச் சுட்டிக் காட்டுகிறார் (கு. முதற்பாவலர், குறள்மணி மாலை, ப.5).

## 4. தொகைநிலைத் தொடர்

தொகைநிலைத் தொடர்கள் இவையிவை என்னும் பட்டியலைக் குறித்துப் பின்வரும் தொல் காப்பிய நூற்பா அமைந்துள்ளது.

வேற்றுமைத் தொகையே உவமைத் தொகையே
வினையின் தொகையே பண்பின் தொகையே
உம்மைத் தொகையே அன்மொழித் தொகையென்று
அவ்வா றென்ப தொகைமொழி நிலையே
(தொல்.சொல்.நூ.412)

புலவர்கள் செய்யுள் இயற்றும்போது அதன் பொருண்மை, வடிவம், பா வகை முதலியவற்றிற்கு ஏற்ப சொற்களைக் கையாண்டுள்ளனர் என்பதை,

> புலவர் தம் படைப்புகளில் ஒவ்வொரு சொல்லையும் காரணம் கருதியே அமைப்பர். சொற்களைத் தொக வைத்தும் வெளிப்படை யாக வைத்தும் முறைமாறி வைத்தும் பல்வேறு நுட்பங்களை உணர்த்துவர். இந்நுட்பங் களைப் பொருள் காண்போர் ஆய்ந்து கண்டாலன்றி அப்பாடல்களுக்கு நல்விளக்கம் தர இயலாது (இ. சுந்தரமூர்த்தி, திருக்குறள் பரிமேலழகர் உரைத்திறன், ப. 123)

என்னும் கூற்று எடுத்தியம்புகின்றது. மொழிநூல் வல்லுநர்கள் தொடர்களை இரண்டு வகைகளாகப் பிரிப்பார்கள் அவை,

தொகை நிலைத் தொடர்
தொகா நிலைத் தொடர்

தொகை நிலைத் தொடர்களைத் தொகை என்றும் சுருக்கமாக அழைப்பர். தொகை என்றால் தொக்கி நிற்றல் அல்லது மறைந்து நிற்றல் எனப் பொருள்படும். பெயர்ச் சொல்லோடு பெயர்ச் சொல்லும் பெயர்ச் சொல்லோடு வினைச் சொல்லும் தொடரும்போது இடையில் வேற்றுமை, வினை, பண்பு, உவமை, உம்மை, அன்மொழி ஆகியவற்றின் உருபுகள் இடையில் மறைந்து வருவதே தொகை என்பர். இரண்டு சொற்கள் அல்லது இரண்டுக்கு மேற்பட்ட பல சொற்கள் தொடர்ந்து ஒரு மொழி போல வருபவையே தொகைநிலைத் தொடர்கள். அதுவே வினைச் சொல்லோடு வினைச்சொல் சேர்ந்து வருவது தொகை நிலைத்தொடர் ஆகாது.

## 5. வினைத்தொகை

வினையின் தொகுதி காலத்தியலும் (தொல்.சொல்.414) என்ற நூற்பாவின் மூலம் வினைச்சொற்கள் காலத்தோடு வருமெனத் தொல் காப்பியம் விளக்குகின்றது. காலத்தியலும் எனப்


DOI: 10.30726/ijlca/v8.i3.2021.83005

பொதுவாகக் கூறியதால் இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என மூன்று காலத்திலும் வரும் என எடுத்துக்கொள்ள வேண்டும். அதுவே,

காலம் கரந்த பெயரெச்சம் வினைத்தொகை
(நன்.நூ.364)

என்ற நூற்பாவின்படி காலம் காட்டும் வினையுருபு களான இடைநிலை விகுதி மறைந்து நின்று பெயரெச்சங்கள் வினைத்தொகைகள் ஆகுமென்பது நன்னூலாரின் கருத்து. திருக்குறளுக்கு இலக்கண உரை எழுதிய பரிமேலழகரும் சொற்றொடரில் பொதிந்து கிடக்கும் தொகைகளை ஆங்காங்கே சுட்டிக்காட்டிச் செல்கிறார். வினைத்தொகை இடம்பெறும் குறளாக அவர் சுட்டுவது,

ஆகூழால் தோன்றும் அசைவின்மை கைப்பொருள்
போகூழால் தோன் மடி (குறள். 371)

என்ற குறட்பாவில் 'ஆகூழ்', 'போகூழ்' என்னும் வினைத்தொகைகள் எதிர் காலத்தான் விரிக்கப்பட்டுக் காரணப் பொருளவாய் நின்றன எனச் சுட்டுகிறார். ஒரு பொருளின் ஆக்க அழிவுகளுக்குக் காரணத்தோடு போகும்கூழ் என்ற எதிர்கால விரியில் வந்துள்ளது என்கிறார்.

| | |
|---|---|
| போன கூழ் | ஆன கூழ் |
| போகின்ற கூழ் | ஆகின்ற கூழ் |
| போகும் கூழ் | ஆகும் கூழ் |

இவற்றில் காலம் காட்டும் இடைநிலைகளும் பெயரெச்ச விகுதிகளும் மறைந்து நின்று பெயரெச்சத் தோடு வந்த வினைத்தொகைகளாகும். ஆகும் கூழால், போகும் கூழால் எனச் சொற்றகள் குறளில் விரிந்து வந்திருந்தால் நாலசைச்சீர் வரும் என்ற காரணத்தாலே வினைத்தொகையை கையாளுகிறார் வள்ளுவர். ஆகுங்கூழால் என்பது நாலசைச் சீராகும். நாலசைச்சீர் என்பது வெண்பாவிற்குக் கிடையாது எனவே வெண்பாவின் இலக்கணம் பிழையாமல் இருக்க இங்கு தொகை பயன்படுகிறது. மானடி (குறள்.3) என்ற சீரை வினைத்தொகை எனக் காரிரத்தினக்கவிராயர் விளக்கி யுள்ளார். மேலும் விரிநீர் (குறள்.13), சேர்புகழ் (குறள்.5), வீழ்நாள் (குறள்.38) முதலிய பல வினைத்தொகைகள் திருக்குறளில் இடம்பெற்றுள்ளன என்பதை அறிய முடிகின்றது.

## 6. பண்புத்தொகை

தொல்காப்பியர் பண்புத்தொகையின் இலக்கணத்தை,

வண்ணத்தின் வடிவின் அளவின் சுவையினென்று
அன்ன பிறவும் அதன் குணம் நுதலி
இன்னது இதுவென வரூஉம் இயற்கை
என்ன கிளவியும் பண்பின் தொகையே
(தொல்.சொல்.நூ.416)

என்ற நுற்பாவின் மூலம் விளக்குகிறார். பண்புத் தொகை வண்ணம், வடிவு, அளவு, சுவை, குணம் ஆகியவற்றின் அடிப்படையில் பிறக்கும். இன்னது இதுவென ஒன்றனை ஒன்று சிறப்பித்து இரு சொல்லும் ஒரு பொருள் மேல் வரம் இருபெயரொட்டுப் பண்புத்தொகையும் பண்புத்தொகை என்கிறார் தொல்காப்பியர். திருக்குறளில், ஆதி பகவன் என்னும் இருபெயரொட்டுப் பண்புத்தொகை வடநூல் முடிபு என்கிறார் பரிமேலழகர். ஆதி பகவன் இதில் பகர ஒற்று மிகாமையால் வடநூல் முடிபு என்று பரிமேலழகர் சுட்டிக்காட்டியிருப்பதைக் காரிரத்தின கவிராயர் விளக்கியுள்ளார். இருபெயரொட்டுப் பண்புத் தொகையைச் சுட்டிக்காட்டிய பரிமேலழகர் எந்த குறளிலும் பண்புத் தொகை குறித்து விளக்கவில்லை. அனைவருக்கும் நன்கு தெரிந்த பண்புத்தொகையை விளக்க வேண்டிய அவசியமில்லை என அவர் கருதியிருக்கலாம். மனிதனின் பண்பு சார்ந்த கருத்துகளை எடுத்து ரைக்கும் திருக்குறளில் எண்ணற்ற பண்புத்தொகைகள் உள்ளன. பசும்புல் (குறள்.16), சொம்பொருள் (குறள்.358), இன்சொல் (குறள்.99) முதலிய சீர்கள் பண்புத்தொகையால் அமைந்தன வாகும்.

## 7. உம்மைத் தொகை

தொடரில் சொற்களை இணைத்துப் பொருளைக் கொடுப்பதற்கு உம் என்னும் உருபு பயன்படுகிறது.


DOI: 10.30726/ijlca/v8.i3.2021.83005

'ஆடும் மாடும் புற்களை மேய்ந்தன' இத்தொடரில் உம்மைத் தொகை பயின்று வந்துள்ளது. 'உம்' என்னும் உருபு சில இடங்களில் வெளிப்படையாகத் தோன்றாமல் மறைந்து வரும். அவ்வாறு வருவதை உம்மைத் தொகை என்பர்.

இருபெயர் பல்பெயர் அளவின் பெயரே
எண்ணியற் பெயரே நிறைபெயர்க் கிளவி
எண்ணின் பெயரோடு அவ்வாறு கிளவியும்
கண்ணிய நிலைத்தே உம்மைத் தொகையே
(தொல்.சொல்.நூ.417)

என்ற நூற்பாவில் உம்மைத் தொகை ஆறு வகைகளில் வருமெனத் தொல்காப்பியர் விளக்கியுள்ளார்.

தானந் தவமிரண்டும் தங்கா வியனுலகம்
(குறள். 19)

என்னும் குறளின் உரையில், தானந் தவமிரண்டு எனச் செவ்வெண் தொகை பெற்றது என்று இலக்கணக் குறிப்பினைக் காரி இரத்தினக் கவிராயர் தருகிறார். 'தானமும் தவமுமிரண்டும்' என உம் உருபு வெளிப்படையாக வந்தால் வெண்பாவிற்குரிய சீரும் தளையும் உரிய வகையில் வராமல் வெண்பாவின் இலக்கணம் தவறாகும் என்ற காரணத்தினால் நாலசைச்சீரைத் தவிர்க்க உம் உருபைத் திருவள்ளுவர் தொகையாக்கி உம்மைத் தொகையாகக் குறிப்பிட்டு உள்ளார்.

## 8. உவமைத் தொகை

'உவமத் தொகையே உவம இயலே' (தொல்.சொல்.நூ.414) என்ற தொல்காப்பிய நூற்பா உவம உருபுகள் மறைந்து வருவது உவவமைத்தொகை என்கிறது. இலக்கண உரை கூறிய பரிமேலழகர் கூட எங்கேயும் எவ்விடத்திலும் எந்த குறளிலும்ம உவமைத் தொகையைச் சுட்டிக் காட்டவில்லை. உவமை அணியை விளக்கிச் சென்றிருப்பதால் உவமைத் தொகையை விளக்கவில்லை எனக் கருதலாம். வேய்தோள் (குறள்.1113) என்பதில் 'போன்ற' என்ற உவம உருபு மறைந்துள்ளது. உவம உருபு வெளிப்படையாக வந்திருப்பின் இரண்டாம் அடியில் மூன்றாம் சீருக்குப் பதிலாக நான்குச் சீர்கள் வரும். குறள் வெண்பாவின் ஈற்றடி முச்சீர்தான் வர வேண்டம் என்ற விதி இருப்பதனால் உவமைத்தொகையைக் கையாண்டிருப்பதை அறிய முடிகிறது.

## 9. அன்மொழித் தொகை

தொடலைக் குறுந்தொடி (1135) என்பது உவமைத் தொகைப் புறத்து பிறந்த அன்மொழித் தொகை என்கிறார் பரிமேலழகர். தொடலைக் குறுந்தொடி - மாலை போலத் தொடர்ந்த சிறு வளையினையுடைய பெண் என்பது இதன் பொருள். இதனை வெளிப்படையாகக் கூறாமல் அன்மொழித் தொகையில் அழகுபட அமைத்துள்ளார். வெளிப்படையாகக் கூறினாலும் குறள்வெண்பா வடிவத்தில் சிக்கல் ஏற்படும். சேயிழை (குறள்.1110), மணிழை (குறள்.1114), பணிமொழி (குறள்.1121) முதலிய சீர்களில் அன்மொழித் தொகை அமைந்திருப்பதை அறிய முடிகிறது.

## 10. வேற்றுமைத் தொகை

'வேற்றுமைத் தொகையே வேற்றுமை இயல' (தொல்.சொல்.நூ.413) என்பது தொல்காப்பிய நூற்பா. சொல்லின் பொருளை வேறுபடுத்தி உணர்த்துவதற்குத் துணை செய்யும் வேற்றுமை உருபுகள் மறைந்து வருவது வேற்றுமைத் தொகையாகும். அத்தகைய வேற்றுமைத் தொகைகளைக் குறள் வெண்பாவிற்குரிய சீர், தளை தட்டாமல் இருக்க எண்ணற்ற குறள்களில் வள்ளுவர் பயன்படுத்தியுள்ளார்.

வாழ்நாள் வழியடைக்கும் கல் (குறள்.38)

என்னும் குறளில் 'வழியடைக்கும்' என்னும் சீரைத் தொகையில் எழுதாமல் 'வழியை அடைக்கும்' என விரியில் எழுதியிந்தால் மூவவசைக்குப் பதிலாக நாலசை வந்திருக்கும். குறள் வெண்பாவிற்கான அசை


DOI: 10.30726/ijlca/v8.i3.2021.83005

பிழையாமல் இருக்கவே இரண்டாம் வேற்றுமைத் தொகை இடம்பெற்றுள்ளது.

தந்தம் வினையால் வரும் (குறள்.63)

என்னும் குறட்பா விரிவுரையில், பரிமேலழகர் தம்தம் வினை என்புழித் தொக்கு நின்ற ஆறாம் வேற்றுமை ‘முருகனது குறிஞ்சி நிலம்’ என்புழிப் போல உரிமைப் பொருட்கண் வந்தது என்கிறார். எனவே தந்தம் என்பது தந்தமது எனக் காய்ச்சீர் பெற்றிருக்கும் அடுத்த சீர் நிரையில் தொடங்குவதால் வெண்பாவின் இலக்கணம் பிழையாகும் என்பதால் இக்குறளில் வேற்றுமைத் தொகை வந்திருப்பதை உணரலாம்.

## 11. முடிவுரை

- வினைச் சொல்லோடு வினைச்சொல் சேர்ந்து வருவது தொகைநிலைத் தொடர் ஆகாது.
- இலக்கண உரை எழுதிய பரிமேலழகர் பண்புத் தொகையைச் சுட்டிக் காட்டவில்லை. இருபெயரொட்டுப் பண்புத்தொகையைமட்டும் சுட்டிக் காட்டியுள்ளார்.
- முப்பாலில் காமத்துப்பாலில் மட்டும் அன்மொழித் தொகையைக் காண முடிகிறது.

குறளில் தொகைகள் இடம்பெறவில்லையென்றால் வெண்பாவிற்குரிய சீர், தளையில் பிழை ஏற்படும். நாலசைச்சீரும் பிற தளைகளும் இடம்பெறும். இதனை தவிர்க்கவே வள்ளுவப் பெருந்தகை தொகைநிலைத் தொடர்களைக் குறளில் திறம்பட கையாண்டிருக்கிறார்.

## துணைநூற்பட்டியல்

[1] சுந்தரமூர்த்தி, இ.,பரிமேலழகர் உரைத் திறன், ஐந்திணைப் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, 2006.

[2] திருக்குறள், பரிமேலழகர் உரை, பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, முதற்பதிப்பு, 1962, எட்டாம் பதிப்பு, 2010.

[3] தொல்காப்பியர், தொல்காப்பியம் சொல்லதிகாரம், மு. சண்முகம் பிள்ளை (ப.ஆ.), முல்லை நிலையம், சென்னை, முதற்பதிப்பு, 1995.

[4] நுண்பொருள் மாலை, திருமேனிகாரி இரத்தினக் கவிராயர், இ.சுந்தரமூர்த்தி - பதிப்பாய்வு, தேன்மொழி நூலகம், முதற்பதிப்பு, 1980.

[5] பவணந்தி முனிவர், நன்னூல் சொல்லதி காரம், சோம. இளவரசு (உ.ஆ.), மணிவாசகர் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, 2004, ஏழாம் பதிப்பு, 2013.

[6] முதற்பாவலர், கு., யாப்புக்கு வயது 50 - குறள்மணி மாலை, நறுமுகை பதிப்பகம், செஞ்சி, முதற்பதிப்பு, 2015.



DOI: 10.30726/ijlca/v8.i3.2021.83005